**செ. கு. எண்: 041** **நாள்: 11.04.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை –11.4.2017

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம், தமிழ்நாடு சிறப்பு காவல் **11**-ம் அணி, காவலர் F.ஜமீல் ரகுமான் அவர்கள் உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

தருமபுரி மாவட்டம், அ. பள்ளிப்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு K.சரவணன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகரம், மதுரை தெற்கு வாசல் காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு M.ஆறுமுகம் அவர்கள் உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், வேலகவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. S.பாரதி அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், தென்கரை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு S. வைரமணி அவர்கள் உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு உள்ளன்புடையார் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், குமரலிங்கம் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சௌந்தரராஜன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், ஆயுதப்படை, மோட்டார் வாகன பிரிவு, தலைமைக் காவலர் திரு த. ராமநாதன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகரம், ஆயுதப் படை 2-ம் படைப்பிரிவில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. M.ராஜதுரை அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், ஆயுதப்படை, தலைமைக் காவலர் திரு M.S முருகன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், சிதம்பரம் போக்குவரத்து காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு R.செல்வராஜ் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், அந்தியூர் காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு K. மோகனசுந்தரம் அவர்கள் மாரடைப்பால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஆயுதப் படை, முதல் நிலைக் காவலர் திரு. S. பரமசிவன் அவர்கள் மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கரூர் மாவட்ட தனிப்பிரிவு அலுவலகத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு சி. கணேசன் அவர்கள் மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகரம், சிங்காநல்லூர் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில், உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு ப. அய்யாசாமி அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் போக்குவரத்து காவல் பிரிவில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு T.முருகன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு மோகன்ராஜ் அவர்கள் உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த காவலர் திரு சி. வைகுந்தராமன் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாநகரம், மாநகர குற்றப்பதிவேடு கூடத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திருமதி P.ஜெயலட்சுமி அவர்கள் மாரடைப்பின் காரணமாக உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, தலைமைக் காவலர் திரு R.ஜெயசந்திரன் அவர்கள் உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட 20 காவலர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களது குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**